தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

K.சந்திரசேகரன்
தலைவர்

R.சந்திரசேகரன்.
பொதுச்செயலாளர்

**சுற்றறிக்கை – 11** 08-08-2016

அன்புடையீர்

வணக்கம். ஆகஸ்ட்-8 இன்று எனது நினைவு 6 ஆண்டுகளுக்கு முன் 2010-ம் ஆண்டில், இதே 8-8-ல் காரமடையில் நடைபெற்ற 59-வது மாநிலப்பொதுக்குழு நிகழ்வுகளுக்கு என்னை அறியாமலேயே கொண்டு சென்றுவிட்டது.

பொதுக்குழு துவங்கும் முன் காலை 8.30மணிக்கு பொறுப்பாளர்கள் தேர்தல் குறித்து, சங்கத்தின் மூன்று பிரதான பொறுப்பாளர்கள் ஆலோசனை மேற்கொண்டோம்.

சங்கத்திற்குபொதுவாக இருந்தவர் இன்னும் 2 ஆண்டுகளுக்கு மட்டுமே பொறுப்பில் இருக்கப்போவதாகவும், அதற்குப்பிறகு வேறு துறைகளில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து, தலைவர் அவர்கள் சும்மா இருக்காமல், தானும் 2 ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்க விரும்புவதாகவும், அதற்குள் தற்போது நிதிச்செயலாளராக இருக்கும் சந்திரசேகரனை தயார் செய்து, அவரிடம் பொதுச்செயலாளர் பொறுப்பை ஒப்படைத்து, நாம் இருவருமே சங்கத்தை விட்டு விலகிவிடலாம் என்று தெரிவித்தார். இது போதாதா? “ ஓ” எனக்கே மாற்று தயார் செய்கிறீர்களா ? என்று மனதிற்குள் எழுந்த தீ, ஜுவாலை விட்டு எரிந்து சங்கத்தையே சுட்டுப் பொசுக்க முற்பட்டதையும், ஆயிரக்கணக்கான பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் அணிதிரண்டு, ஒற்றுமையாக 4 ஆண்டுகளில் போராடி தீயினை முற்றிலுமாக அணைத்து, 8-6-2014 அன்று நடைபெற்ற வரலாற்றுச்சிறப்பு மிக்கத் தேர்தல் மூலம் புடம் போட்டத் தங்கமாக, நமது சங்கத்தை மீட்டு வந்துள்ளோம் என்பதை எண்ணும் போது, மனம் நெகிழ்கிறது அல்லவா?

தொய்வுற்றிருந்த சங்க நடவடிக்கைகளை மேம்படுத்தி, பல்வேறு வியூகங்கள் அமைத்து, குறுகிய காலத்தில் சீரமைத்து, இரண்டே ஆண்டுகளில், சிங்கம் போலமிடுக்கு இருக்கு எனும் அளவில், மின்வாரிய அரங்கில் மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கிறது நமது சங்கம் என்பது, நம் அனைவருக்கும் பெருமைதானே! இந்த இடைப்பட்ட 2 ஆண்டு காலத்தில்

1. அட்டைப்பட்டியல் பிரிவில் 1½ மணிநேரம் பணிநேர உயர்வை தடுத்து நிறுத்தியது,
2. இளநிலை உதவியாளர் உள்முகத் தேர்வு நியமனத்திற்கு S. S. L. C. -க்குப் பதிலாக “ பட்டப்படிப்பு” என்று மாற்றியதை தடுத்து நிறுத்தியது.
3. மஸ்தூர், களஉதவியாளர், அலுவலக உதவியாளர் முதலிய குறைந்த சம்பளம் பெற்று வாரியத்தில் கடைநிலையில் உள்ள ஊழியர்களுக்கும் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்புக்கு 90 நாட்கள் ஊதியம் பெற்றுத் தருவது,

4. மத்திய அலுவலகத்தில், நிர்வாகம் மற்றும் செலவினப்பகுதிகளுக்கு பணிப்பகிர்வு மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கையை தொழிற் சங்கங்களோடு பேசி வரையறை செய்திடும் தீர்ப்பினை பெற்றது.
5. 01-01-2003 முதல் வருவாய்மேலாளர் தேர்வுநிலை ஊதியம்ரூ.5850-200-11050-க்குப் பதிலாக ரூ.8100-275-15225 வழங்கிடும் தீர்ப்பினைப் பெற்றது. முதலிய பிரச்சனைகளில் நமது சங்கத்தின் பங்கு பிரதானமானது என்பது நமக்குப் பெருமையல்லாவா! சங்கத்தின் இத்தகைய தனிப்பட்ட முத்திரைகள் தொடரும். ஐயமில்லை.

முதல் 2 ஆண்டுகளில் 8-6-2014 முதல் 2-7-2016 வரை சங்கத்தை நிலை நிறுத்தி, மின்வாரியத்தில் ஒரு சக்தி மிக்க அமைப்பாக, மீண்டும் 2010-க்கு முந்தைய நிலைக்கு கொண்டு வந்துள்ளோம்.

இரண்டு ஆண்டுகள் கழித்து மீண்டும், 3-7-2016-ல் நமது சங்கத்தின் தேர்தல் திருப்பூரில் நடைபெற்று, புதிய பொறுப்பாளர்கள்ள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம்.

நமது சங்கம் ஜனநாயக முறையில் செயல்படும் அமைப்பாகும். அடுத்த 2 ஆண்டுகளில் மீண்டும் தேர்தல் நடத்தி, புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்வது நிச்சயம் நடக்கும்.

இந்த 2 ஆண்டுகளில் 01-12-2015 முதல் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வைப் பெற்றிடவும் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருந்து நிரந்தரம் பெற்றுள்ள சுமார் 30000 பேருக்கு பழைய ஓய்வூதியத் திட்டப் பலனை பெற்றுத்தரவும் உரிய நடவடிக்கை எடுப்போம்.

இத்துடன் பணியில் இருக்கும் தொழிற்சங்கப் பொறுப்பாளர்களை அடையாளம் கண்டு சங்கத்தின் அத்துனைப் பரிமாணங்களிலும் அவர்களுக்கு முழுமையாகப் பயிற்சி கொடுத்து, அவர்களிடம் சங்கத்தை படிப்படியாக ஒப்படைக்க முயற்சிகள் மேற்கொள்வோம்.

தொடர்ந்து காலாகாலத்திற்கும் நாங்களே பொறுப்பாளர்கள் என்பதைவிட, சங்கத்தால் பயிற்சி பெற்ற அடுத்தத் தலைமுறையினர் சிறப்பாக சங்கத்தை நடத்துகிறார்கள் என்று சொல்வதைத்தான் நாம் பெருமையாகக்கருதுவோம்.

அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்படுவோம்

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்.

பெறுநர் வட்டச்செயலாளர்கள்
வட்டத்தலைவர்கள்
மண்டலச்செயலாளர்கள்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

நகல். செய்தி மடல்.

**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

| | |
|---|---|
| **K.சந்திரசேகரன்** | **R.சந்திரசேகரன்.** |
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** |

**<u>சுற்றறிக்கை – 10</u>** **<u>05-08-2016</u>**

அன்புடையீர்

வணக்கம். இச்சுற்றறிக்கையில் 2 துயர நிகழ்ச்சிகளை வருத்தத்துடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

1. நமது சங்கத்தின் முன்னாள் தலைவர், P. இராமகிருஷ்ணன் அவர்கள், நீண்ட நாட்களாக உடல்நலமின்றி 27-07-2016 அன்று இரவு காலமானார். அவருக்கு வயது 78. துயரச்செய்தி அறிந்தவுடன் சங்கத்தலைவர், பொதுச்செயலாளர், அமைப்புச்செயலாளா திரு.சு.முருகேசன், துணைத் தலைவர்கள் திரு.M. நாகராஜன், திரு.N. பெரியசாமி, இணைச்செயலாளர் திரு.பி.அன்பழகன், பன்னாட்டுத்தொடர்பு செயலாளர் திரு.பா.தியாகராஜன், முன்னாள் வட்டச்செயலாளர் வேலூர் திரு. கண்ணன், திரு.காளன், தஞ்சை திரு.R. ரங்கசாமி ஆகியோர் 28-7-2016 அன்று தஞ்சாவூர் சென்று இறுதி மரியாதை செலுத்தினோம்.
   தஞ்சையில் நமது சங்கத்தை மிகச்சிறப்பாக கொடிகட்டிப் பறக்கச் செய்தவர். சங்கத்திற்கு நிர்வாகம் கடுமையான நெருக்கடி கொடுத்த காலத்திலெல்லாம், தளராமல் சங்கப்பணியாற்றியவர். பகுத்தறிவாளர். எதையும் வெளிப்படையாக பேசுபவர். அஞ்சாநெஞ்சர் அவரது இழப்பால் வாடும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், சங்கப் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
2. நமது சங்கத்தின் கோவையின் முன்னாள் மண்டலச்செயலாளர் திரு.G. கோபால் அவர்கள், ஏழு எட்டுத் திங்களாக உடல் நலம் பாதிக்கப் பட்டு, பெருத்த பொருட்செலவுடன் தீவிர சிகிச்சை மேற்கொண்டும், பலனளிக்காமல் 31-07-2016 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவருக்கு வயது 55.
   31-07-2016 அன்று காலை உயிர் பிரிந்த நிலையில், அவர் மாதக் கணக்கில் கடும் நோயினால் பாதிக்கப்படடிருந்த காரணத்தால், அன்றைய மதியமே இறுதிச்சடங்கு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. குறுகியகாலமே இருந்ததால், சங்கத்தலைவர் மற்றும் பொதுச் செயலாளரால் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள இயலவில்லை.
   31-07-2016 அன்று சென்னையில் திட்டமிடப்பட்டிருந்த சங்கத்தின் உயர்மட்டக்குழு கூட்டம், திரு.G. கோபால் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதோடு முடித்துக்கொள்ளப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொள்ள

முந்தையஇரவு சென்னை வந்திருந்த துணைத்தலைவர் திரு.M. நாகராஜன், அமைப்புச்செயலாளர் திரு.சு.முருகேசன் ஆகியோர் காலையில் இரயில் பிடித்து கோவை சென்று இறுதிச்சடங்கில் கலந்துகொண்டனர். அதேபோல் 31-7-2016 காலையில் சென்னை வந்திருந்த கோவை மண்டலச்செயலாளர் திரு. S. நாகராஜன், மதுரை மண்டலச்செயலாளர் திரு.அபுத்தாயர், பன்னாட்டுத் தொடர்பு செயலாளர் திரு.பா.தியாகராஜன் ஆகியோர் விமானம் மூலம் கோவை சென்று இறுதிச்சடங்கில் கலந்துகொண்டனர்.

திரு.G. கோபால் 1987-ல் களஉதவியாளராக மின்வாரியத்தில் சோந்து சிறப்புநிலை ஆக்கமுகவர் வரை பதவி உயர்வு பெற்றார். இளநிலைப் பொறியாளர் 2-ம் நிலை பதவி உயர்வும் கிடைத்தது. ஆனால் உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் இருந்ததால், பதவியேற்க முடியவில்லை. 1987-ல் சங்க உறுப்பினராகச் சேர்ந்து, இறுதியில் மண்டலச்செயலாளர் வரை பல்வேறு பதவிகள் சிறப்பாக வகித்தார். சங்கத்தின் வருங்காலத்தலைவர்களில் ஒருவராக அடையாளம் காணப்பட்டவர். நம்மையெல்லாம் ஏமாற்றிச் சென்றுவிட்டார். அவரது சிரித்த முகம், அருமையாகப் பழகும் விதம், தொண்டு மனப்பான்மை சகல தரப்பினரையும் கவர்ந்ததால் 4-7-2016-ல் கோவை சங்க அலுவலகத்தில் நடைபெற்ற அவரது படத்திறப்பு நிகழ்ச்சியில், சங்கத் தலைவர், பொதுச்செயலாளர், மத்தியசங்கப் பொறுப்பாளர்கள் , மண்டலச் செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள் மட்டுமின்றி, சகோதர சங்கத் தலைவர்கள், அலுவலர்கள் , பெண்கள் என பெருந்திரளாகக் கலந்து கொண்டு திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினாகள். அவரது இழப்பால்வாடும் அவரது குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் , சங்கப் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முன்னாள் தலைவர், P. இராமகிருஷ்ணன் மற்றும் கோவையின் முன்னாள் மண்டலச்செயலாளர் திரு.G. கோபால் ஆகியோர் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் , சங்கத்தின்பால் அவர்கள் இருவரும் கொண்ட பற்று, பாசம் என்றும் நம் நெஞ்சினில் நிலைத்திருக்கும்.

வாழ்க அவர்களது புகழ்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்.

பெறுநர் வட்டச்செயலாளர்கள்
வட்டத்தலைவர்கள்
மண்டலச்செயலாளர்கள்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

நகல். செய்தி மடல்.